1981 மே 14]

உ. சேலம் மாவட்டத்தில் தீவனம் இல்லாது கால்நடைகள் இறத்தல்.

திரு இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டத்தில் வைக்கோல் இல்லாததால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்தது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டத்தில் வறட்சியின் காரணமாகத் தீவனப் பற்றாக்குறை நிலவுகிறது. ஆனால் தீவனம் இல்லாமல் எந்தக் கால்நடையும் இறந்ததாகத் தகவல் இல்லை. திருச்செங்கோடு, ஆத்தூர் பகுதிகளில் பல விவசாயிகள் தங்கள் உபரிக் கால்நடைகளைத் தீவனப் பிரச்சனையைச் சமாளிக்க விற்பனை செய்வதாகவும் அறியப்படுகிறது. போதுமான தீவனம் கிடைக்காவிடில் நலிவுற்ற கால்நடைகள் நோய்வாய்ப்பட ஏது உண்டு. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கு வைத்திய உதவி அளிக்கத் தேவையான மருந்துகள் கால்நடை மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேவையான தொற்று நோய்த் தடுப்பு மருந்துகளும் உள்ளன. சேலம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு நியாயவிலையில் வைக்கோல் கிடைப்பதற்கு, அங்குள்ள கால்நடை மருத்துவமனைகளில் வைக்கோலை விற்பனை செய்வதற்கான திட்டத்துக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. கால்நடைத்துறையினால் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே மாடுகளுக்கு வைக்கோல் இல்லாததன் காரணமாகச் சென்னை நகரிலே உள்ள மாடுகள் மாதிரி அவைகளும் போஸ்டர்களைக் கிழித்துத் தின்று கொண்டிருக்கின்றன. மேலும் அரசாங்கமும் தடை விதித்திருக்கின்ற காரணத்தால் மாடுகள் எல்லாம் சாகும் தறுவாயில் இருக்கின்றன. ஆகவே குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு வழங்குவது போன்று மாடுகளுக்கும் வைக்கோலுடன் தவிடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அடுத்து சேலம் மாவட்டத்திற்கு என்று எவ்வளவு ரூபாய்க்கு வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கால்நடைகள் போஸ்டர்களைக் கிழித்துத் திங்காத அளவுக்குத்தான் இன்றைக்கு தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டு பல்வேறு இடங்களில் அசல் விலைக்கே விற்கப்படுகிறது. இதற்காக அரசு 1–3–81 அன்று 20 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இந்தப்பணியைச் செய்வதற்காக 20 கால்நடை மருத்துவர்களும், 40 உதவியாளர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். வைக்கோலும் வாங்கிய விலைக்கே விற்கப்படுகின்றது. வைக்கோல் எடுத்துச் செல்கின்ற செலவை அரசே ஏற்றுக் கொள்கின்றது. ஆகவே வைக்கோல்தான் கால்நடைகளுக்குக் கொடுக்கப்படுகிறதே தவிர தவிடு கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊ. மாஜிஸ்ட்ரேட்— முன்சிப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாஜிஸ்ட்ரேட்— முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை [Tamil Nadu References to Magistrates in Law (Special Provisions) Act. 1980] நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் காலதாமதம் குறித்து திருவாளர்கள் எம். சின்னராஜ், கே. குப்புசாமி, செ. செம்மலை, சி. கோபால், கா. கோபாலகிருஷ்ணன், வே. இரா. ஜெயராமன், ஆ. வெள்ளைச்சாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். சின்னராஜ்: தலைவர் அவர்களே, மாஜிஸ்ட்ரேட்–முன்சீப் ஒருங்கிணைப்புச் சட்டத்தினை [Tamil Nadu References to Magistrates in Law (Special Provisions) Act, 1980] நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் காலதாமதம் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, பேரவை முன் கீழக்கண்ட விவர அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன்.

அறிக்கை.

இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளாகத் தரம் உயர்த்தி அவற்றைத் தமிழ்நாடு நீதித்துறைப்பணியின் கீழ், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தோடு ஒருங்கிணைந்த ஒரே பதவித்தரமாக ஆக்கவேண்டும் என்று உள்துறையின் 31–1–76ஆம் நாளிட்ட 202 ஆம் எண்ணில், அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்ட முன்சீப் பதவிகள், மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகளாகப் பதவிப் பெயரிடப்படவேண்டும் என்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.